## சுருக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை – பழங்குடியினர் மேம்பாடு – மாண்புமிகு அமைச்சர் (ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்) அவர்களால் 18.07.2017 அன்று சட்டமன்ற பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்பு – பழங்குடியின மக்கள் அனைவரும் இணையதளம் வாயிலாக பயனடையும் வகையில், ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஓர் இணையதளம் உருவாக்குதல் – நிதி ஒப்பளிப்பு செய்து – ஆணை வெளியிடப்படுகிறது.

---

## ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ப.மே1(2)) துறை

அரசாணை (ப) எண்.213

நாள் 23.08.2017
துன்முகி வருடம் ஆவணி 07,
திருவள்ளுவர் ஆண்டு 2048

படிக்கப்பட்டது :

மாண்புமிகு அமைச்சர் (ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்) அவர்கள் சட்டமன்ற பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்பு நாள் 18.07.2017.

**************

**ஆணை :-**

மாண்புமிகு அமைச்சர் (ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்) அவர்களால் 18.07.2017 அன்று சட்டமன்றப் பேரவையில் கீழ்கண்டவாறு அறிவிப்பு வெளியிடப்பட்டது.

**பழங்குடியினர் நலத் திட்டங்களைப் பற்றிய இணையதளம் ஏற்படுத்துதல்**

> "பழங்குடியின மக்கள் மேம்பாட்டிற்கான திட்டங்களின் செயல்பாட்டினை கண்காணிக்கவும், வாழ்வாதார முன்னேற்ற நடவடிக்கை திட்டங்களுக்கான விண்ணப்பங்களை இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்கவும், புள்ளி விவரங்களை சேகரிக்கவும், ஒருங்கிணைக்கவும் அடுத்த பத்தாண்டுகளில் பழங்குடியின மக்கள் அனைவரும் இணையதளம் வாயிலாக பயனடையும் வகையில், ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.85,000/– மதிப்பில் ஓர் இணையதளம் உருவாக்கப்படும்".

2. மேற்காணும் அறிவிப்பிற்கிணங்க, பழங்குடியின மக்கள் அனைவரும் இணையதளம் வாயிலாக பயனடையும் வகையில், ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் (Comprehensive Tribal Development Programme) ரூ,85,000/– (ரூபாய் எண்பத்தைந்தாயிரம் மட்டும்) மதிப்பில் ஓர் இணையதளம் உருவாக்கிட நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

..2..

3. மேலே பத்தி 2–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின்கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

"2225 – ஆதி திராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் – 02 பழங்குடியினர் நலன் – 796 பழங்குடியினர் பகுதித் துணைத் திட்டம் – மாநிலச் செலவினங்கள் – JY விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் – 09 உதவித் தொகை – 01 நடப்புச் செலவுக்கான உதவித் தொகை".

(து.தொ.கு.2225 02 796 JY 0912)

4. மேலே பத்தி 2–ல் ஒப்பளிக்கப்பட்டுள்ள தொகையினை பெற்று இணையதளம் உருவாக்கிட இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை–5 அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

5. மேலே பத்தி 2–ல் ஒப்பளிக்கப்பட்ட தொகைக்கான செலவினத்தை பயன்படுத்தியதற்கான சான்றினை குறிப்பிட்ட காலகெடுவிற்குள் அரசுக்கு அனுப்புமாறு பழங்குடியின நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.43480/ நிதி[ஆதி(ம)பந]/2017, நாள் 22.08.2017-இல் ஒப்புதல் பெற்று வெளியிடப்படுகிறது.

// ஆளுநரின் ஆணைப்படி //

ப. அண்ணாமலை,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை–5.
மேலாண்மை இயக்குநர், தாட்கோ, சென்னை–18.
மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை–18/6/35.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–8.

<u>நகல்</u>
நிதி [ஆதி(ம)பந / வ.செ.பொது–II] துறை, சென்னை–9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந5/கமபா/ஆதிந2/அநமு1) துறை, சென்னை–9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை முதன்மைச் செயலாளர் அவர்களின் முதுநிலை தனிச் செயலர், சென்னை–9.
இருப்புக்கோப்பு / உபரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

23.8.17
பிரிவு அலுவலர்
23/8/17